**R5236**

# A Convincing Proof of the Resurrection
# உயிர்த்தெழுதலுக்கு திருப்திகரமான ஒரு ரூபகாரம்

''அவிசுவாசியாயிராமல், விசுவாசியாயிரு.'' –யோவான் 20:27

நமது தலைப்பு வசனத்திற்கு முந்தைய சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலர் தோமா இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு அவர் அளித்த எந்த தரிசனத்திலும் இருக்கவில்லை. தோமா சந்தேகப்படக்கூடிய மனதை உடையவராக காணப்படுகிறார். இயேசுவின் தரிசனத்தை பார்த்ததை மற்ற அப்போஸ்தலர்கள் சொல்ல பரிசுத்த தோமா கேட்டார். இந்த சாட்சியம் மூலம் அவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்ப முடியவில்லை என்பதை உணர்ந்தார். தனது சகோதரர்கள் மிகவும் சுலபமாக வஞ்சிக்கப்பட்டிருந்ததாக அவர் நினைத்தார்.

பரிசுத்த தோமா தனது சக சீஷர்கள் தம்மை வஞ்சிக்க முயற்சித்தற்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால் தான் பெற்ற எந்த சாட்சியத்தையும் நம்ப முடியாது என்று அறிவித்தார். அவர் கூறியதாவது: ''அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான காயத்தை நான் கண்டு,அந்த காயத்தில் என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றார்.'' அவர் மரிக்கவில்லை என்று நீங்கள் என்னை நம்பச் செய்ய முடியாது. ஒருவர் மரணத்தில் சென்ற பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு இருக்கிறார் என்று என்னை நம்ப வைக்க முடியாது. அந்த வஞ்சகம் எங்கேயிருந்து வந்தது என்றோ, ஆனால் சகோதர்களாகிய நீங்கள் மிகவும் சுலபமாக வஞ்சிக்கப்பட்டதைப் பற்றி என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

ஒரு வாரத்திற்கு பின்பு, இயேசு ''மேல் அறையில்'' இரண்டாவது தடவையாக தோன்றினார். அவர்களுக்கு வாழ்த்து சொன்ன பிறகு, அவர் பரிசுத்த தோமாவிடம் கூறியதாவது: ''நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார். உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு.'' மறுபடியும் அவர் ''நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்பும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே'' என்று சொன்னார். சீஷர்கள் ஆவியின் ஜீவியை பார்த்ததில்லை. உண்மையான மாம்சமும் எலும்பும் உருவாக்கப்படுதலைத் தான் அவர்கள் பார்த்தார்கள். கர்த்தர் கேட்டு கொண்டதைப் போல பரிசுத்த தோமா செய்தார். பிறகு அவர் கூறியதாவது; ''என் ஆண்டவரே என் தேவனே!'' அவர்தான் கர்த்தர் என்பதை அவர் ஒத்துக்கொண்டார். அது மாயத்தோற்றம் அல்ல. சகோதரர்கள் வஞ்சிக்கப்படவில்லை. அவர் தான் விசுவாசக் குறைவினால் வஞ்சிக்கப்படும் நிலைமைக்கு அருகே வந்திருந்தார்.

இந்த சம்பவத்தில் நமது கர்த்தர் தம்மை பின்பற்றுகிற அனைவருக்கும் ஒரு உதவிகரமான பாடத்தை கொடுத்திருக்கிறார் என்பதில் நாம் சந்தேகப்பட முடியாது. கர்த்தரின் உயிர்த்தெழுதலை அப்போஸ்தலரில் யாரும் சந்தேகப்படும்படி காணப்படாதிருந்தால் இந்த உண்மைக்கு அவர்கள் திருப்திகரமான ரூபகாரத்தை அவர்கள் கொண்டு வந்திருக்க முடியாது. ''நாம் ஏன் மேலும் விசாரணை பண்ணாமல் போனோம்'' என்று அவர்கள் அதன்பிறகு நினைத்திருப்பார்கள். ஆனால் நாம் இங்கே விசாரணையின் ரூபகாரத்தை பெற்றிருக்கிறோம்.

சில ஜனங்கள் இயற்கையிலேயே மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் கர்த்தர் அதிருப்தியடைவார் என்று நாம் நினைக்க முடியாது. நமது கருத்தின்படி, உண்மையிலேயே ஆராய விரும்புகிறவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். எளிதில் எதையும் நம்புகிறவர்களை, எளிதில் சம்மதிக்க வைக்கக்கூடியவர்களை நாம் இயற்கையாகவே நாம் ஏற்றுக் கொள்ள மறுப்போம். பரிசுத்த தோமாவைப் போல மனோபாவம் உடையவர்களை நாம் உயர்வாக கூட நினைப்போம். இந்த அப்போஸ்தலரைப் போல சரிகட்ட முடியாத யோசனையுள்ளவர் இருப்பதினால் நாம் சந்தோஷப்படுகிறோம்.

இது சம்பந்தமாக கர்த்தர் கூறியதாவது: ''நீ என்னை கண்டதினால் விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.'' இந்த வார்த்தைகள் மூலம் கர்த்தர் என்ன சொல்கிறார் என்ற கேள்வி எழலாம். உங்களை சம்மதிக்க வைக்க முடியவில்லை என்பதற்காக உங்களை வாழ்த்திக்கொள்ளாதீர்கள் என்று கூறியிருக்கலாம். விசுவாசம் உள்ளவர்களுக்கு, காணாமல் விசுவாசிப்பவர்களுக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு என்று அவர் கூறியிருக்கலாம்.

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படும் சமயத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சீஷர்கள் இருந்தார்கள். ஒரு சமயத்தில் அவர்கள் பார்த்ததாக அப்போஸ்தலர் கூறுகிறார். (1கொரிந்தியர் 15:6) ஆனால் அதன் பிறகு, மற்ற சகோதரர்களின் சாட்சியத்தை மட்டுமே கேட்டு காணாமல் விசுவாசிக்கிறவர்களாக இருந்தார்கள். நாமும் கூட இந்த பிரிவை சேர்ந்தவர்களாக இருக்கிறோம். சுவிசேஷ யுகத்தில் உள்ள அனைத்து சபைகளும் வெளிப்படையான விளக்கங்களை காணாமலேயே விசுவாசிக்கிறார்கள். இதன்படி கர்த்தர் நம்மேல் விசேஷித்த பிரியம் உள்ளவராக இருப்பாரா என்பதை நாம் அறியோம். ஆனால் நாம் நினைக்கவில்லை. நாம் லேசான ரூபகாரத்தைக் கொண்டோ அல்லது மாபெரும் ரூபாகரத்தைக் கொண்டோ விசுவாசிக்கிறோமா என்பது நமது மூளையின் அமைப்பை பொருத்தேயாகும். தேவனால் அழைக்கப்பட்ட அனைவரும் போதுமான ரூபகாரத்தை பெறும்படி அவர் பார்க்கிறார். நமது விசுவாசத்தில் நாம் நிலைத்திருக்கும்படி அப்போஸ்தலர் காலத்தில் இருந்தே அவர் நமக்கு அதிகப்படியான ரூபகாரங்கள் கொடுக்கிறார். பரிசுத்த தோமாவின் சந்தேகத்திற்கான பலனையும் கர்த்தரின் சுபாவ மாற்றத்தின் அவரது விளக்கத்தையும் நாம் பெற்றிருக்கிறோம்.

## கிறிஸ்தவ முன்னேற்றத்தில் விசுவாசமே மையம்

இயேசு ஏன் விசுவாசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார் என்ற கேள்வி கேட்கப்படலாம். விசுவாசம் இல்லாமல் பரிசுத்த தோமா அவருடைய சீஷனாக இருக்கவே முடியாது என்று ஏன் அவர் குறிப்பாக உணர்த்துகிறார்? விசுவாசத்திற்கு எந்த எல்லையும் காண முடியவில்லை என்றும் தேவன் விசுவாசத்தை ஆசீர்வதிப்பதற்கான காரணத்தை காண முடியவில்லை என்றும் அநேகர் நம்மிடம் கூறுகிறார்கள். மேலும் அவர்களது அபிப்பிராயத்தின்படி செயல்களுக்கே பரிசளிப்பார் என்று கூறுகிறார்கள். ''எங்களால் முடிந்த அனைத்து நல்ல காரியங்களையும் நாம் செய்கிறோம்'' என்று அவர்கள் கூறுகிறார்கள். தங்களால் முடிந்ததை செய்யாதவர்கள் அடிகளை பெறுவார்கள் என்ற கருத்தில் வேதாகமம் எப்பொழுதும் நிலைத்திருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அவர்களது விசுவாசத்திற்கேற்ப பரிசளிக்க எண்ணங்கொண்டிருக்கிறார் என்ற கருத்தையும் வேதாகமம் கொண்டிருக்கிறது. பூரண விசுவாசத்தை அப்பியாசப்படுத்தாதவர்கள் அவரது சீஷனாக இருக்க

முடியாது. ஒருவனுக்கு விசுவாசம் இல்லையென்றால் அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க இயலாது என்று வேதாகமம் கூறுகிறது.

தேவன் செய்திருக்கிற காரியங்களிலும் அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற காரியங்களிலும் வைத்திருக்கிற விசுவாசமே கிறிஸ்தவ முன்னேற்றத்தின் மிகவும் மையமாக தேவனுடைய ஏற்பாடுகளில் செய்யப்பட்டிருக்கிறது. தேவனுடைய கிருபைகளினால் தற்கால ஆச்சரியமான சந்தர்ப்பங்களை விசுவாசமானது நாமே பயன்படுத்த இயலும்படி செய்கிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்." ஆனால் நிலைமை இப்பொழுதைப் போலவே எப்பொழுதும் இருக்கும் என்பதோ அல்லது தங்கள் மனதில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த முடியாதவர்களை எப்பொழுதுமே தேவன் நிராகரிப்பார் என்பதோ அதன் பொருளல்ல. ஆனால் தற்காலத்தில் விசுவாசமுள்ள –வர்களைத் தவிர வேறு யாரையும் தேவன் இரட்சிக்க மாட்டார் என்பதே அதன் பொருள்.

எனினும் சபையானது தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களது விசுவாசத்திற்கு பரிசளித்தலுக்குப் பிறகு கர்த்தர் சகல மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கு உலகத்தோடு தற்போது விசுவாசத்தை அப்பியாசப்படுத்தி கிறிஸ்துவும் சபையும் சேர்ந்த வகுப்பாரோடு தொடர்பு கொள்ளுவார் என்று வேத வாக்கியங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது. அடுத்த யுகத்தில் இப்பொழுதைக் காட்டிலும் குறைவான விசுவாசமே தேவைப்படும். மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும். பிறகு மனுக்குலம் விசுவாசத்தில் நடக்க கடமைப்பட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் தரிசித்து நடப்பார்கள். நாமோ இப்பொழுது தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.

இயற்கையின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும் பொழுது, உலகை தேவன் ஆளவே இல்லை, உலகமானது தற்செயலாக ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லது சாத்தானாலே ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது போல் காணப்படுகிறது. தேவன் மகா ராஜாவாக அங்கீகரிக்கப்பட்டால், நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் நிலைமைகள் முற்றிலும் வேறானதாக இருக்கும். இந்த காலத்தில் ஆசீர்வாதத்தை நாம் பெற வேண்டுமென்றால் நாம் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த வேண்டும். விரைவில் மேசியாவின் ஆளுகையில் நீதிக்கு எதிராக இருக்கும் எல்லாம் தண்டிக்கப்படும். நீதிக்கு இசைவாக இருக்கும் அனைவரும் வெகுமானம் அளிக்கப்படுவார்கள். பிறகு நீதியை எதிர்ப்பவர்கள் அனைவரும் தள்ளப்படுவார்கள். நீதியை சிநேகிக்கிற அனைவரும் செழிப்பாவார்கள். அதுதான் தரிசித்து நடக்கிற காலமாக இருக்கும்.

தற்காலத்தில் நாம் விசுவாசித்து நடக்க வேண்டும். ஏனென்றால் நமது இரட்சிப்பு விசேஷமானது. "பரம அழைப்பு" என்பது ஒரு விசேஷித்த வகுப்பாருக்கு ஒரு விநோதமான சலுகை. எனினும் அடுத்த யுகத்தில் விழுகையின் மூலமாக மனுக்குலத்தின் சமநிலையற்ற மனது ஈடு செய்யப்படும். செயல்விளக்கம் அதிகம் தேவைப்படுகிறவர்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்; குறைவாக தேவைப்படுகிறவர்களுக்கு குறைவாக கிடைக்கும். கீழ்ப்படிதலின் கிரியை முழுமையாக அடையாதவர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்பட மாட்டாது என்பது தெளிவுபடுத்தப்படும். இந்த கிரியைகள் படிப்படியாக அவர்களை முழு மனித பூரணத்திற்கு வழி நடத்தும். தேவன் தம்முடைய தேவை மற்றும் பிரமாணங்களில் நியாயமற்றதை கொடுத்திருக்கவில்லை. அவர் எதிர்பார்க்கிற ஒவ்வொன்றும் நியாயமானதும் அத்தியாவசியமானதும் ஆகும்.

## நமது கர்த்தரின் சுபாவ மாற்றம்

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு நாற்பது நாட்களில் சீஷர்களின் நிலைமையில் நம்மை வைத்துப் பார்க்கும் போது அவர்கள் கணிசமான அளவுக்கு குழப்பத்தில் இருந்திருப்பார்கள் என்று நாம் சொல்லக்கூடும். அவர்களில் ஒவ்வொருவரும் விநோதமான காரியங்களுக்கு சாட்சிகளாயிருந்தார்கள். என்ன என்பதை அவர்களால் விளக்க முடியவில்லை. ஆனால் இயேசுவாக இருக்க வேண்டும் என்பதற்கானவைகளை அவர்கள் பார்த்திருந்தார்கள். ஒரு சமயத்தில் தோட்டக்காரராகவும் மற்றொரு சமயத்தில் அந்நியராகவும் தோன்றினார். இன்னொரு சமயத்தில், கதவு பூட்டியிருக்கும் போது, சீஷர்கள் மத்தியில் தான் முன்னிருந்த நிலைமையிலே தோன்றினார். கதவு பூட்டியிருக்கும் போது எப்படி ஒரு மனிதன் உள்ளே வர முடியும் என்பதை அவர்களால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஆகையால் கணிசமான அளவு குழப்பம் இருந்தது.

தேவன்,இயேசுவை மரித்தோரிலிருந்து ஒரு வித்தியாசமான சுபாவத்திற்கு, ஒரு ஆவியின் ஜீவியாக உயிர்த்தெழுப்பினார் என்பதை புரிந்துகொள்ளவே நமது கர்த்தர் பல்வேறு உருவங்களில் வெளிப்படுத்தினார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு காரணமாக கூறுகின்றன. வேத வாக்கியங்கள் அறிவிப்பதாவது: "நமது கர்த்தரே ஆவியானவர்." (2 கொரிந்தியர் 3:17) இரண்டாவது ஆதாம் பரலோக கர்த்தர். அவர் பூமிக்குரிய மனிதன் இயேசுவல்ல. நாம் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து வாழ்வதால் நாம் இந்த விளக்கத்தை உணர்ந்து கொள்ளக்கூடும். இயேசு, ஆவியின் ஜீவியாக ஆகியிருந்தார் என்பதை நாம் பார்த்து புரிந்து கொள்ளக்கூடும். அதாவது தேவ தூதர்களைப் போல் தேவையான சமயத்தில் மனிதர்களைப் போல தோன்ற முடியும். இயேசு சிலுவையில் அறையப்பட்ட அதே சரீரத்துடன், நுழையும் போதும் வெளியேறும் போதும், கதவு திறக்கப்படுவதையும் மூடப்படுவதையும் பார்க்க முடியாமல் அப்போஸ்தலர்களது கண்கள் குருடாக்கப்பட்டு, அவர் உள்ளே தோன்றியிருந்தால், அதற்கான காரணத்தை நாம் கேட்கவே முடியாது. ஆனால் இப்படிப்பட்ட யூகத்தை பதிவானது மறுக்கிறது. "கதவானது மூடப்பட்டிருந்ததும்" கதவு திறக்கப்படுவதை அப்போஸ்தலர்கள் பார்க்கவில்லை என்பதும், கதவை அவர்கள் திறக்கவே இல்லை என்பதும் தெளிவாக அறிக்கையில் இருக்கிறது. தோமா இருந்த போது "கதவு மூடப்பட்டிருக்கும் போது" நமது கர்த்தர் அதே போல தோன்றினார் என்று இரண்டாவது கூற்று கூறுகிறது. (யோவான் 20:19,26)

இயேசு சரீரத்தை கொண்டு வர முடிந்த போது, அவரே ஆவியின் ஜீவியாக உள்ளே வந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இதை அவர் செய்திருந்தால், அவர் சிலுவையில் அறையப்பட்ட அவரது மாம்சீக சரீரத்திலேயே அவர் எழுந்திருந்தார் என்று நினைத்து வஞ்சிக்கப்பட்டிருப்பார்கள். ஆகையால் அவர் பல்வேறு மாம்ச சரீரங்களில் அவர் தோன்றினார். அவர் தான் என்பதற்கு சந்தேகம் வராத அளவுக்கு ஏற்ற சூழ்நிலைகளில் தோன்றினார். சீஷர்கள் பரிசுத்த ஆவியை பெற்ற பிறகு சகலமும் அவர்களுக்கு தெளிவாகும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகையால் அவர் அந்த சமயத்தில் அவர்களுக்கு விளக்கிச் சொல்ல முயற்சிக்கவில்லை. ஆனால் பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் வரும்வரை,

அவர் அவர்களோடு தொடர்பு மட்டும் வைத்திருந்தார். பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு அவர்கள் உண்மையான கருத்தில் புரிந்துகொண்டார்கள்.

ஆகையால் நமது கர்த்தர் தோன்றிய பொழுது அவர் தக்க சரீரத்தை எடுத்துக் கொண்டார் என்பதே நமது கருத்து. இது ஒரு வஞ்சகம் அல்ல. சுபாவ மனிதர்களாக இருந்து, மாம்சீக சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கு மாறுவதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது. ஆகையால் ''அவர் உயிர்த்தெழவில்லை'' என்று கூறுகிற கஷ்டத்திலிருந்து அவர்களுக்கு உதவி செய்யவே இந்த தரிசனமாகும்

## உயிர்த்தெழுதல் மிகவும் தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது

நமது கர்த்தர் மரிப்பதற்கு முன்னதாக இருந்ததைக் காட்டிலும் வித்தியாசமான வல்லமையை உடையவராக இருந்தார் என்பதை சீஷர்களால் காண முடிந்தது. இப்படியாக அவர் நாற்பது நாட்களில் ஒரு சமயத்தில் சில நிமிடங்கள் மட்டுமே அவ்வப்போது தோன்றி மறைந்தார். அவர் ஒரு ஆவியின் ஜீவியாக இருந்தார் என்பதையும் அவர் காற்றைப் போல வந்து போக அவர் வல்லமை உடையவரக இருந்தார் என்பதையும் தேவைப்படும் போது மாம்சத்தில் தோன்றவும் பிறகு மறையவும் அவரால் கூடும் என்பதையும், வெவ்வேறு உருவங்களில் வரவும் முடிந்தவராக இருந்தார் என்பதையும் விளக்கும் நோக்கத்தை நிறைவேற்றவே இந்த தரிசனம் என்பது தெளிவாகிறது. எந்த வகையிலும் அவர்கள் வஞ்சிக்கப்படாதபடி இந்த பெரிய பாடத்தை அவர் திட்டமிட்டார்.

இயேசு எந்த மேன்மையான வழியில் தமது உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தி, அவரது சீஷர்களின் விசுவாசத்தை பலப்படுத்தியிருக்கக் கூடும் என்பதை நம்மால் கற்பனை பண்ணி பார்க்க முடியவில்லை. ஒரு மனிதனாக அவர் தொடர்ந்து அவர்களுடன் இருந்திருந்தால், அவர் அதே சரீரத்துடன், அதே குணநலத்துடன் இன்னும் இருந்தார் என்று விசுவாசித்திருக்கக் கூடும். ஆனால், ''இதோ, நான் சகல நாட்களிம் உலக முடிவு பரியந்தமும் உங்களுடன் இருக்கிறேன்'' என்று அவர் கூறிய வார்த்தைகளின் பொருள் புரியாமல் இருந்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள், அவர் தோன்றி, மறைந்துவிட்டார் என்பதையும் எனினும் அவர், நாற்பது நாட்கள் முழுவதும் அவர்கள் கூட இருந்தார் என்பதையும், அவர் சுவிசேஷ யுகம் முழுவதும் அவர்களுடன் இருக்கக்கூடும் என்பதையும், யுக முடிவில் தேவைப்படும் போது நேரடியாக திரும்பி வருவார் என்பதையும் புரிந்துகொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இதில் வஞ்சகம் எதையும் நாம் காணவில்லை, ஆனால் வஞ்சகம் தவிர்க்கப்பட்டதையே காண்கிறோம். அவர் ஒரு மாற்றமடைந்த ஜீவியாக இருக்கிறார் என்பதை சாட்சிக் கூற அநேக தரிசனங்கள் தேவைப்பட்டது என்பதை நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கிறோம். சீஷர்கள் அவரை பரலோகத்தில் இருக்கிற ஒரு மனிதனாக நினைத்திருந்தால் பேர் கிறிஸ்தவ சபைகளில் உள்ள நமது நண்பர்கள் போல தீவிரமான தவறுக்கு வழி நடத்தியிருக்கும். பேர் கிறிஸ்தவ நண்பர்கள், இயேசு அதே மாம்ச சரீரத்தில் எழுந்து, அதே மாம்சத்தோடே பரலோகத்தில் இருக்கிறார் என்று நினைக்கிறார்கள். பாடல் ஒன்று கூறுகிறதாவது:

''அவர் பொறுத்த இரத்தம் வழிய ஐந்து காயங்கள்,
கால்வாரியில் பெற்றது;
அவைகள் பயனுள்ள ஜெபங்களை ஊற்றுகின்றன,
அவைகள் எனக்காக மன்றாடுகின்றன.''

நமது பேர் கிறிஸ்தவ நண்பர்கள் இதை நம்புகிறார்கள். இயேசுவின் காயப்பட்ட மாம்சத்தில் அடையாளங்களையும் தழும்புகளையும் உடையவராக இருக்கிறார் என்று நீங்கள் நினைத்தால் அவருடைய சீஷர்களும் அதே போல பெற்றிருப்பார்களே என்று அவர்களை கேட்கிறோம். அவர்கள் அதற்கு, ஆம் என்று பதில் கூறுகிறார்கள். அவர்களில் சிலர் மிகவும் பயங்கரமாக தீங்கு விளைவிக்கப்பட்டார்கள். மரிப்பதற்கு முன்னர் பல்வேறு காயங்கள் பட்டவர்கள், சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களை நினைத்துப் பாருங்கள்; விபத்தை சந்தித்து காயப்பட்டவர்கள்! அவர்கள் அந்த காயங்களுடன் அல்லது தலையில்லாமல் பரலோகத்தில் இருந்தால், அவர்கள் உறுப்புகள் சிதைக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.

இந்த கருத்தை பெற்றிருப்பவர்கள் வேதாகமம் விவரிக்கிற இரட்சிப்பை விசுவாசிக்கவே இல்லை என்று நாங்கள் அவர்களுக்கு காண்பிக்கிறோம். நமது நண்பர்களுக்கு நாம் குறிப்பிடுவதாவது: ''அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்.'' ''அவருடைய ஆத்துமா தன்னை பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தது.'' அவர்கள், ஆம், அவரது மாம்ச சரீரம் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம் என்று பதிலளிக்கிறார்கள். அவரது மாம்ச சரீரம் ஆதாமின் மாம்ச சரீரத்தை மட்டுமே இரட்சிக்கும் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆனால் ஆதாமின் மாம்ச சரீரத்துக்கும் மேலாக அவர் பெற்றிருந்தார். ஆதாமின் ஆத்துமா தான் பாவம் செய்தது. ஆதாமை மீட்க இயேசு ஒரு ஆத்துமாவை கொடுத்திருக்க வேண்டும். (ஏசாயா 53:10,12)

சரீரமானது இயேசுவின் ஒரு பகுதியாகவே இல்லாதிருந்தால், மரித்தது இயேசுவல்ல, அவரது சரீரமேயாகும்; அவமானப்பட்டுத்தப்பட்டது அவரல்ல, அவரது சரீரமே. தனது மகிமையை விட்டுவிட்டு பலியிடப்பட்டது அவரல்ல, அவரது சரீரமே. இப்போது சரீரம் இயேசுவாக இல்லாதிருந்தால், பிறகு அவர் ஒரு மனிதனாக நினைக்கும்படி செய்து மனுக்குலத்தை வஞ்சித்தார்; அவர் அப்போஸ்தலரிடம், ''அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நம் நிமித்தம் தரித்திரரானார்'' என்று கூறி அவர்களை வஞ்சித்தார். (2 கொரிந்தியர் 8:9) அவர் சோதிக்கப்பட்டார் என்று அப்போஸ்தலர் பவுல் கூறியது தவறாக இருந்திருக்கும். ஏனெனில் அவர் வேறுபட்ட சுபாவத்தை உடையவராயிருந்தால், அவர் நம்மைப் போல் சோதிக்கப்பட்டிருக்க முடியாது. ஆகையால் வேதாகமம் போதிக்கிறது போல சத்தியமானது இசைவாக இருக்கிறது என்று நாம் காண்கிறோம்.

## உலகத்தின் உயிர்த்தெழுதல்

முதலாம் உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தது, அவரது உயிர்த்தெழுதலைப் போல, அவரது சரீரத்தின் கடைசி அங்கம் பூமிக்குரியதிலிருந்து வானத்திற்குரியதற்கு, தெய்வீக சுபாவத்திற்கு மாற்றத்தை அனுபவிக்கும் போது அது முடிவடையும். உலகத்தின் உயிர்த்தெழுதல் சபையின் உயிர்த்தெழுதலுக்கு முந்திக் கொள்ளாது, ஆனால் பின் தொடர வேண்டும். பழங்கால பாத்திரர்கள்தான் மானிட சுபாவத்தில்

உயிர்த்தெழுதலில் முதலாவதாக இருப்பார்கள். ஆனால் அவர்களது உயிர்த்தெழுதல், சபையின் உயிர்த்தெழுதலின் காலத்தில் இராமல் அதற்கு பின்னரே இருக்கும். அப்போஸ்தலர் கூறுவதாவது; “அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக மாட்டார்கள்.” (எபிரேயர் 11:39,40)

உலகத்தாரின் எழும்புதல் ஒரு வேளை ராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது அல்லது நு று வருடங்கள் வரை ஆரம்பிக்காது. எனினும் அந்த காலக்கட்டத்தில் உயிர்த்தெழுதலின் வேலை அப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கிற நாடுகளிடையே படிப்படியாக நடக்கும். ஜாதிகளும், ஜனங்களும், உறவுக்காரரும், பாஷைக்காரரும் விழித்தெழுவார்கள். அவர்கள் சத்திய அறிவுக்குள்ளாக கொண்டு வரப்பட வேண்டும். அவர்களுக்குள் உயிர்த்தெழுதலின் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அவர்கள் தங்களது சம்மதத்தை தெரிவிக்க வேண்டும். இந்த வேலை மேசியாவின் ஆளுகையின் ஆயிர வருடங்கள் முழுவதும் தொடர்ந்து நடைபெறும்.

உலகத்தின் உயிர்த்தெழுதல் ஆயிர வருட முடிவு வரை முழுமையாக நிறைவடையாது. ஆனால் சபையின் உயிர்த்தெழுதல் ஆயிரம் வருடயுக ஆரம்பத்திலேயே முடிவடையும். இந்த காரணத்தினால் நீதிமான்கள் மற்றும் அநீதிமான்களின் உயிர்த்தெழுதல் ஒரே சமயத்தில் நடைபெறும் என்று கூறுவது சரியாக இருக்காது. உண்மையிலேயே ஆயிரம் வருட முடிவில் தான் உலகத்தின் உயிர்த்தெழுதல் முடிவு பெறும். அவர்கள் பிதாவாகிய தேவனிடம் திருப்பப்படுவார்கள். ஒருவர் விழுந்தாலும் அது பரலோக பிதாவின் சலுகை மற்றும் ஐக்கியத்தில் இழப்பாக இருக்கும். மத்தியஸ்தர் மனுக்குலத்தில் அவரது வேலையை அவர்களுக்குள் நிறைவேற்றும் வரை அவர்கள் விழுகையின் அம்சத்திலிருந்து விடுவிக்கப்படமாட்டார்கள்.